# இலங்கைத் தமிழர் குடிபெயர்வு. மலாய–மேற்குலகக் குடிபெயர்வு – ஓர் ஒப்பீட்டாய்வு

ச.சத்தியசீலன்


## ஆய்வுச்சுருக்கம்

*இலங்கைத் தமிழரின் வாழ்க்கையில் வெளிநாட்டுக் குடிபெயர்வு என்பது மிக முக்கியத்துவம் கொண்ட அம்சமாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் 1870களில் ஆரம்பித்த மலாயக் குடிபெயர்வையும், 1950 களின் பின்னர் பல்வேறு கட்டங்களில் இடம் பெற்ற மேற்கு நாடுகளுக்கான குடிபெயர்வையும் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காட்டி, இலங்கைத் தமிழரின் அரசியல், பொருளாதார சமூக வாழ்வில் சமூக அமைப்பில், சமூக உருவாக்கத்தில் அது ஏற்படுத்திய தாக்கங்களையும், விளைவுகளையும் எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அத்துடன் இலங்கைத் தமிழரின் அரசியல், பொருளாதார, சமூக மேம்பாட்டிற்கு இக்குடிபெயர்வை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் கட்டுரை அடையாளம் காட்டுகிறது.*


பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாம் காலின் பின்பாக இலங்கையிலிருந்து பிரதான மாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தமிழ் மக்கள் குடிபெயர்ந்து செல்லத் தொடங்கி யுள்ளனர். இக்குடிபெயர்வு யாழ்ப்பாண தீபகற்பத்திலிருந்து புறப்பட்டு ஏனைய இலங்கைப் பிரதேசங்களுக்கும் இன்னும் முக்கியமாகக் கடல் கடந்து இந்தியா, பர்மா, மலாயப் பிரதேசங்களுக்கும் பின்னர் மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் செல்வதாக அமைந்தது. இக்குடி பெயர்வுக்கான காரணிகளுக்கு இடையே பல ஒத்த தன்மைகள் இருந்த போதும் வேறுபட்ட தன்மைகள் காணப்படுவதனையும் அவதானிக் கலாம்.

இலங்கைத் தமிழரின் வாழ்க்கையில் வெளிநாட்டுக்கான குடிபெயர்வு அல்லது இடப்பெயர்வு என்பது மிக முக்கியத்துவம் கொண்ட அம்சமாக 1980 களின் பின்பான காலப்பகுதியில் காணப்படுகின்றது. இக்குடி பெயர்வுடன் 1870 களில் ஆரம்பித்து மலாயா நாட்டிற்குள் இடம் பெற்ற குடிபெயர்வின் பிரதான அம்சங்களை ஒப்பிட்டு இரண்டு குடிபெயர்வுகளும் இலங்கைத் தமிழரின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில், சமூக அமைப்பில் ஏற்படுத்திய தாக்கங்களையும், விளைவுகளையும் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அத்துடன் இலங்கைத் தமிழரின் அரசியல், பொருளாதாரம், சமூக மேம்பாட்டிற்கு இக்குடிபெயர்வை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை அடையாளம் காட்டுவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

இந்த ஆய்வுக்கட்டுரையானது ஆசிரிய ராலே 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்திற்கு முதுகலைமாணிப்பட்ட ஆய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தவது மலாயக் குடிபெயர்வு தொடர்பான ஆய்வுக்கட்டுரையின் பிரதான கருத்துக்களையும்[1] 1992 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆராய்ச்சி

நிதியுதவி கொண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கைத் தமிழரின் சர்வதேச குடிபெயர்வு பற்றிய ஆய்வில் பெறப்பட்ட கருத்துக்களையும்,[2] கடந்த மூன்று மாதங்களாக பெரிய பிரித்தானி யாவிலும், கனடாவிலும் நேரடியாக அவதானித் தவைகளைக் கொண்டும், மேற்குலக நாடுகளில் வசிக்கும் நண்பர்கள், அறிந்தவர்களுடனான நேர்முக விசாரணைகள் மூலம் பெற்ற கருத்துக்களையும் உள்வாங்கி எழுதப்பட்ட ஒன்றாக அமைந்துள்ளது.

பொதுவாகக் குடிபெயர்வு எனும்போது தனியார் ஒருவரோ அல்லது ஒரு குழுவோ தனது இருப்பிடத்தை நிரந்தரமாக மாற்றி அமைப்பதையே கருதுகின்றது. வளர்ந்து வரும் குடித்தொகைக்கும், வளங்களுக்குமிடையில் சமபலம் தொடராத நிலையில் மக்கள் மீள் குடிப்பரம்பலை ஏற்படுத்துவதையே குடிப்பெயர்வு அல்லது இடப்பெயர்வு என்பர். பொருளாதார, சமூக, அரசியல், கலாசார மற்றும் தனிப்பட்ட பண்புகளுடன் இணைந்த இக் குடிபெயர்வானது மனிதனோ அல்லது மக்கள் குழுக்களோ தனித்தோ அல்லது இணைந்தோ தாம் வாழும் பிரதேசத்திலிருந்து தள்ளுவிசை, இழுவிசைக் காரணிகள் விளைவாக ஏற்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் தரவுகள் சேகரித்தலில் காணப்படும் குறைபாடுகள் குடிப்பெயர்வு பற்றி ஆராய்வதற்குப் பெரும் இடர்ப்பாடுகளைத் தருகின்றன.

பிரித்தானியரால் ஐக்கிய மலாய் அரசுகள் (F.M.S) உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து யாழ்ப்பாணத்துத் தமிழர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வெளிநாடுகளுக்கான குடிபெயர் வானது இன்றுவரை தொடர்ந்து இடம் பெற்று வருவதைக் காண்கிறோம். இலங்கைத் தமிழர் வரலாறு பொறுத்து வெளிநாடு ஒன்றிற்கு குறிப்பிடத்தக்க அளவில் இவர்கள் குடிபெயர்ந்து சென்றமை மலாயக் குடிபெயர்வுடன் ஆரம்பித்தது எனலாம். இத்தகைய குடிபெயர்வு ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பினர் மத்தியில் இருந்து ஏற்பட்டதாகவே அமைந்தது. அதாவது பொருளாதார வசதியுள்ள ஓரளவு ஆங்கிலக் கல்வி கற்ற மத்திய வகுப்பு மக்களிடமிருந்து தான் இக்குடிபெயர்வு இடம்பெற்றிருந்தது.

மலாயக் குடிபெயர்வுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் புவியியல், பொருளாதாரக் காரணிகள் பெரிதும் உதவியிருந்தன. வரண்ட காலநிலையும், மழைவீழ்ச்சிக் குறைவும், பெருகி வந்த குடித்தொகைக்கு ஏற்ற அளவில் விவசாய நிலங்கள் இல்லாத தன்மையும், இயலக் கூடியவர்களை மலாயாவிற்கும், தென்னிலங் கையின் வேறுபகுதிகளுக்கும் தொழில் முயற்சி பொறுத்துப் போக வைத்தது ஒப்பீட்டடிப்படை யில் இலங்கையில் யாழ்ப்பாணப் பிரதேசம் வரண்ட வளமற்ற பகுதியாகவே காணப்பட்டது. தென்னிலங்கையில் ஏற்பட்டு வந்த பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையுடன் சம்பந்தப்பட்ட பாரிய பொருளாதார அபிவிருத்திகள் யாழ்ப்பாணப் பிரதேசம் பொறுத்து ஏற்படாமலே இருந்தன. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தியோடு இணைந்த எந்த மாற்றங் களும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டுமல்ல தமிழர் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசங் களிலும் ஏற்படாமலே இருந்தன. இக்காரணங் களால் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வாழ்ந்த மக்கள் நிலத்துடன் பிணைக்கப்படாத வகை யிலே வேறிடங்களுக்கு அல்லது வேறு முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்த வேண்டியவர் களாகக் காணப்பட்டனர்.

அத்தகைய ஒரு முயற்சிக்கு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரித்தானியர் ஆட்சியின் போது குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இடம்பெற்று வந்த ஓர் அபிவிருத்தி வாய்ப்பாக அமைந்தது. அது தான் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மிஷனரி மார்களின் கல்வி நடவடிக்கையாகும்.[3] கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புவதுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதும் கூடவே ஆங்கில மொழியிலான ஒரு கல்வித் திட்டத்தையும் இவர்கள் இப்பகுதியிலே விதைத்திருந்தார்கள். மிஷனரிமாரின் மதம் பரப்பும் முயற்சிகளுக்கு எதிராக இந்து அபிமானிகளால் தாபிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களும் அவர்கள் பின்பற்றிய வழிமுறைகளைப் பின்பற்றி ஆங்கில மொழி மூலக்கல்வியை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பரப்பலாயின.[4] இவ்வகையில் ஆங்கில மொழியறிவைப் பெற்றுக் கொண்ட ஒரு பிரிவினர் இலங்கையில் அரசாங்க தொழில்களைப் பெற்றுக்கொள்வதில் தம் கவனத்தைத் திருப்பலாயினர். அதே நேரம் இவர்களுள் ஒரு பிரிவினர் அபிவிருத்தி அடைந்து வந்த மலாயத் தீபகற்பத்துக்கும் சென்று அங்கும் இடைநிலைத் தரத்திலான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். இத்தகைய தொடர்பு ஏற்படுவதற்குப் பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையிலே அரச சேவையிலும், பெருந்தோட்ட, தனியார் நிறுவனங்களிலும் கடமையாற்றிவிட்டு மலாயாவிற்கு மாற்றலாகிச் சென்ற ஆங்கில அதிகாரிகளின் தொடர்பு காரணமாக இருந்தது. இவர்கள் யாழ்ப்பாணத்தவரது ஊக்கத்தையும், விடா முயற்சியையும், நேர்மையையும் நன்கு அறிந்திருந்தமையால் தாம் மலாயா சென்ற போதும் அங்கும் இத்தகையோரை விரும்பி அழைத்திருந்தனர். இத்தகைய தொடர்புகள் காலப் போக்கில் அங்குள்ள நிலைமைகளை யாழ்ப்பாணத்தவர் அறியவும், தம் உறவினர்களை அழைத்து வேலை பெற்றுக் கொடுக்கவும் காரணமாக அமைந்தன. இப்பின்னணியில் தான் யாழ்ப்பாணத்தவரது முதலாவது மலாயக் குடிபெயர்வு அமைந்தது. இந்தக் குடிபெயர்விலே பொருளாதார போக்கே அதாவது பணத் தேட்டமே பிரதானமாக அமைந்தது. உழைக்கும் வரை அங்கு இருந்து விட்டு மீண்டும் தம் நாட்டிற்குத் திரும்பிவந்து வாழ்வது அவர்களது நோக்கமாக இருந்தது. அங்கு நிரந்தரமாகத் தங்கி விடுவது என்பது இக்குடிபெயர்வில் முக்கியத்துவம் பெறவில்லை. அவ்வகையில் யாழ்ப்பாணத்தவரின் மலாயக் குடிபெயர்விற்கு முழுக்க முழுக்கப் பொருளாதாரக் காரணங்களே அடிப்படையாக இருந்தன.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மலாயாவுக்கு இடம்பெற்ற குடிபெயர்வும் அதனால் ஏற்பட்ட தொடர்புகளும், விளைவுகளும் யாழ்ப்பாண சமூகத்தில் பல்வேறு துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.[5] ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக இத் தொடர்பும், அவற்றின் விளைவுகளும் படிப்படியான முக்கியத்துவத்தைப் பெற்றுச் சமீப காலமாக முன்னர் பெற்றிருந்த முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருளாதார, சமூக, சமய, அரசியல் துறைகளிலே பெருமளவுக்கு யாழ்ப்பாண சமூகத்தின் மத்திய வகுப்பிடையே இக்குடிபெயர்வின் தாக்கத்தை நாம் கண்டு கொள்ளலாம். சாதாரண ஏழை விவசாயி, தொழிலாளியின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வு பொறுத்துக் குறிப்பிடத்தக்க எந்த மாற்றத்தையும் இம் மலாயத் தொடர்பு ஏற்படுத்தவில்லை எனலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மலாயா வுக்குக் குடிபெயர்ந்தவர் யாழ்ப்பாண சமூகத்தில் வளர்ந்து வந்த மத்திய வகுப்பைச் சேர்ந்த வர்களாகவே காணப்பட்டனர். மணியகாரர், உடையார், விதானை போன்ற அரச அலுவலர், பொருளாதார வசதியுள்ள விவசாயிகள், சிறுவர்த்தகர் இவர்களது புதல்வர்களாகவே காணப்பட்டனர். இவர்களே தங்கள் புதல்வர் களுக்கு ஆங்கிலக் கல்வியையும், மலாயா வுக்குச் செல்வதற்கான பொருளாதார வசதியையும் அளிக்கக் கூடியவர்களாகக் காணப்பட்டனர், யாழ்ப்பாண சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்து தற்போது வெளி நாடுகளுக்குக் குடிபெயர்வது போலல்லாது சமூகத்தின் மேல் தளத்திலிருந்து இடம்பெற்ற குடிபெயர்வாகவே யாழ்ப்பாணத்தவரது மலாயக் குடிபெயர்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார மூலங்களுள் ஒன்றாக மிக அண்மைக்காலம் வரை மலாயத் தொடர்பால் பெறப்பட்ட வருமானம் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தவர் மலாயாவில் தொழில் புரிந்த காலத்தில் இங்கு அனுப்பிய பணமும், பொருட்களும் பின்னர் (பென்சன்) ஒய்வூதியமாக மாதாமாதம் வந்த பணமும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான பொருளாதார மூலங்களுள் ஒன்றாக அமைந் திருந்தது. 1960 இல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான பணப்பயிரான புகையிலைச் செய்கை யால் வந்த வருமானத் திலும் இரண்டரை மடங்கு அதிகமானதாக மலாயன் ஒய்வூதியம் மூலம் வந்த பணம் காணப்பட்டது.[6] இவ்வாறு வந்து குவிந்த பணத்தின் பெரும் பகுதி முறையான வகையில் வருமானத்தைத் தரும் வழிகளில் முதலீடு செய்யப்படாது கல்வீடுகளைப் பெரிதாக அமைப்பதிலும், காணிகளின் விலைகளை அதிகரிப்பதிலும், சீதனங்களைப் பெருமளவில் கொடுப்பதிலும் செலவழிந்தது. இவர்கள் மூலமாகப் பெறப்பட்ட பெருமளவு பணம் வருமான மூலமாக முதலீடு செய்யப்படாதமை மிகப் பெரிய குறைபாடாக அமைந்தது.

மலாயாவுக்குக் குடிபெயர்ந்த யாழ்ப் பாணத்தவர் தாம் பெற்றிருந்த பொருளாதாரப் பலத்தினாலும், மலாயாவில் பெற்ற அனுபவத்தி னாலும் யாழ்ப்பாண சமூகத்தில் தனி முதன்மை பெற்ற வகுப்பினராக மாற்றம் பெற்றனர். தங்கள் புதல்வர்களுக்குச் சிறந்த கல்வி வாய்ப்புக்களை அளித்ததன் மூலமாக மலாயத் தொடர்புள்ளவர் களிடையே யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு கற்றோர் குழாத்தை உருவாக்கிக் கொண்டனர். யாழ்ப்பாண சமூகத்தில் கல்வியில் அக்கறை கொண்டு கற்று உயர் பதவிகளை முதலில் வகித்தவர்களாகக் காணப்படுபவர் மலாயத் தொடர்புடையவர்களின் புதல்வர்களாவர். அது மட்டுமல்ல தாம் பெற்றிருந்த பொருளாதார பலத்தின் உதவியால் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய, சிறுவர்த்தக வகுப்பிலிருந்து கல்வி கற்று பல்துறையிலும் எழுச்சி பெற்று வந்த கற்றோர் குழாத்தையும் திருமண உறவுகள் மூலம் தம் வட்டத்திற்குள் சேர்த்து யாழ்ப்பாண சமூகத்தின் தனி முதன்மை வாய்ந்த பிரிவினராகத் தங்களை ஆக்கிக் கொண்டனர்.[7]

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கிலக்கல் விக்கும், இந்துமத வளர்ச்சிக்கும் மலாயப் பணம் பெருமளவு உதவியுள்ளது. இம் மாவட்டத்தில் கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் கல்வி , மத நடவடிக்கைகளை எதிர்த்து நின்று செயற்படும் வகையில் இந்துக் கல்வி நிறுவனங்களுக்கு மலாயாவில் தொழில் புரிந்த யாழ்ப்பாணத்தவர் பொருளுதவியை அளித்துள்ளனர். இருபதாம்

நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் தனிப்பட்ட வர்களினாலும், இந்துமத நிறுவனங்களினாலும் நடத்தப்பட்டு வந்த இந்துப் பாடசாலைகள் மலாயாவில் உள்ள யாழ்ப்பாணத்தவரின் உதவியைக் குறிப்பிடத்தக்களவு பெற்று இயங்கி வந்தன.[8] இத்தகைய பாடசாலைகள் நிதி நெருக்கடியினால் பாதிப்புறும் சந்தர்ப்பங்களில் அவற்றின் முகாமையாளர் மலாயா சென்று பொருள் ஈட்டுவது பொதுவாகக் காணப்பட்டது. இந்துமத வளர்ச்சிக்கும், இந்துக் கோவில் பலவற்றின் புனருத்தாரண வேலைகளுக்கும் மலாய யாழ்ப்பாணத்தவர் பெருமளவு பொருளுதவியைச் செய்துள்ளனர்.

இலங்கைத் தமிழரின் அரசியல் தலைமைத்துவம் பொறுத்தும் மலாயத் தொடர்புடையவரின் புதல்வர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் உள்ளூராட்சி அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள், வங்கி அமைப்புக்கள், கோவில் நிர்வாகம், ஆலய பரிபாலன சபைகள் போன்றனவற்றில் பங்குபற்றித் தம் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் பேணிக்கொண்டனர். அதனால் இயல்பாகவே யாழப்பாண சமூகத்தில் பழமை பேணும் தன்மை கொண்டவர்களாகத், தங்கள் நலன்கள் பாதிக்கப்படும் என்பதால் சமூக அமைப்பில் பெரிய மாற்றங்களை விரும்பாதவர்களாக இவர்கள் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தவரது மலாயக் குடிபெயர்வு பிற்பட்ட காலங்களில் இலங்கைத் தமிழ் இளைஞர் வெளிநாடுகளுக்குப் பொருள் ஈட்டும் நோக்குடன் சென்று தொழில் பெறுவதனை ஊக்குவித்த ஒரு முன்னோடி நிகழ்வாக அமைந்ததுடன் அத்தகைய மனப்பாங்கினை வளர்ச்சிப்படுத்த உதவியதாகவும் காணப்படு கின்றது. இலங்கைத் தமிழரின் மேற்குலகிற் கான குடிபெயர்வை 1950களின் மத்தியிலிருந்து ஆரம்பித்து வைத்தவர்களாக மலாயத் தொடர் புள்ள யாழ்ப்பாணத்தவரின் புதல்வர்களே காணப்படுகின்றனர், இவர்கள் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிற்குக் கல்வி, மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்காகவும் மலாயாவில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகள் காரணமாகவும் இடப்பெயர்வை ஆரம்பித்து வைத்தவர்களாக இருப்பதை அவதானிக்கின் றோம்.[9]

இலங்கைத் தமிழரின் மேற்குலகிற்கான குடிபெயர்வு இலங்கையில் 1950 களின் பின்னர் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளுடன் ஆரம்பமாகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த தைத் தொடர்ந்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பெரும்பான்மைச் சிங்கள அரசியல்வாதிகள் தங்களுக்குச் சார்பான நன்மை அளிக்கும் கொள்கையைச் சகல துறைகளிலும் பின்பற்றத் தொடங்க அதனால் பாதிக்கப்பட்ட புத்திஜீவிகள் மேற்குலக நாடுகளான இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகளுக்குச் சென்றார்கள்.[10] சிங்களம் மட்டும் அரச கரும மொழிச் சட்டமும், அரச நிர்வாகத் தில் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட தன்மையும் இவர்களை நாட்டை விட்டுப் புலம் பெயரவைத் தது. அதன் பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த இனக்கலவரங்கள் கொழும்பிலும், அதனைச் சுற்றி இருந்த வசதி படைத்த தமிழர்களை வெளியேறச் செய்தது. 1956, 1958, 1961, 1970, 1977, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இத்தகைய தமிழின விரோதக் கலவரங்கள், தமிழர் பொருளாதார அழிப்பு நடவடிக்கைகள் அரசின் மறைமுக ஆதரவுடன்

நடத்தப்பட்டு வந்தன.[11] 1972 இல் கொண்டு வரப்பட்ட குடியரசு அரசியல் திட்டம் சிங்கள மொழியை அரச கரும மொழியாக ஏற்று (சிங்களம் மட்டும் சட்டத்தை) பௌத்த மதத்திற்கு தனி முதன்மையான இடத்தை வழங்கி ஏனைய சிறுபான்மை இன மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கியது.[12] 1949 இல் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்ததுடன் ஆரம்பமான சிறுபான்மையினருக்கெதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மிகவும் மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்டன. மொழி, மதக்கொள்கைகள், அரச, தனியார் துறை வேலைவாய்ப்புக்களின் புறக்கணிப்பு, இலங்கைத் தமிழர் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் திட்டமிட்ட வகையில் பொருளாதார அடிப்படையில் புறக்கணிப்பு, இப்பிரதேசங்களின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், பல்கலைக் கழக அனுமதி முறையில் தரப்படுத்தல் திட்டம் மூலம் தமிழ் மாணவர்கள் தொகையை மட்டுப்படுத்தல் போன்ற பலவழிகளிலும் இலங்கைத் தமிழர் பாதிக்கப்பட்டனர். வைத்திய சேவை, சுகாதார சேவை, போக்குவரத்து, கூட்டுறவுத்துறை, மின்சார விநியோகம், நீர்வசதி, மீன்பிடி அபிவிருத்தி போன்ற பலதுறைகளிலும் இலங்கைத்தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் புறக்கணிக்கப்பட்டன.[13] இலங்கை அரசு காலத்துக்காலம் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வெளிநாட்டு நிதியுதவியில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்களது நல்வாழ்விற்கு உதவும் வகையில் சிறு பகுதியாவது செலவு செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு நிலையில் தான் இலங்கைத் தமிழரின் மேற்கு நாடுகளுக்கான குடிப்பெயர்வு படிப்படியாக இடம் பெறலாயிற்று. இலங்கை அரசாங்கங்களின் தமிழின எதிர்ப்பு நடவடிக்கையின் போது அதனால் பாதிக்கப்பட்ட கல்விமான்கள், அரச ஊழியர்கள், வர்த்தக பிரமுகர்கள், பொருளாதார வசதி படைத்தவர்கள் மேற்கு நாடுகளுக்குக் குடிபெயரலாயினர். 1983 ஜுலை இனக்கலவரத்தை[14] அடுத்தும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகளை அடுத்தும் பெருமளவிலான இலங்கைத் தமிழர் மேற்கு நாடுகளுக்குப் பல்வேறு வழிகளிலே குடிபெயரலானார்கள்.

பின்வரும் கருதுகோள்களை வைத்து இலங்கைத் தமிழரின் மேற்கு நாடுகளுக்கான குடிபெயர்வை நோக்குவது பொருத்தமானதாகும். இக் கருதுகோளுடன் இலங்கைத் தமிழரின் மலாயக் குடிபெயர்வு பெருளவிற்கு வேறுபட்டிருப்பதனை நாம் அவதானித்துக் கொள்ளலாம்.

**ஒப்பீட்டாய்வின் கருதுகோள்கள்.**

I குறுகிய காலப் பகுதியை மையமாகக் கொண்டதாக இக்குடிபெயர்வு அமையவில்லை.

II. குடிபெயர்வில் அரசியல் காணிகளே எல்லாவற்றையும் விட முதன்மை வாய்ந்த காரணிகளாக உள்ளன.

III. குடிபெயர்ந்த நாட்டின் மொழிபற்றிய அறிவோ, கலாசார வேறுபாடோ தடை அம்சமாகக் கொள்ளப்படவில்லை. குடிபெயர்பவர் தொழில் வாய்ப்பிற்காகவும், இருப்பிட வாய்ப்பிற்காகவும் எந்த மொழியையும் கற்க விரும்பும் நிலையில் காணப்பட்டனர்.

IV. முன்பு இடம் பெற்ற குடிபெயர்வின் போது குடிபெயர்ந்தவர் தம் உழைப்பின் பெரும் பகுதியைத் தம் சொந்த நாட்டிற்கு அனுப்புவதையும் சிலகாலத்தின் பின் தம் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதை யும் நோக்காகக் கொண்டிருக்க மேற்குல கக் குடிபெயர்வாளர் தாம் குடியேறிய நாட்டில் நிரந்தரமாக குடியேறுவதைத் தம் நோக்காகக் கொண்டுள்ளனர்.

V. இலங்கையில் காணப்படும் அரசியல் நிலைமைகளை ஒரு சிறு பிரிவினர் பொருளாதார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தல்.

மேற்கு நாடுகளுக்கான இலங்கைத் தமிழர் குடிபெயர்வில் முன்னர் காட்டப்பட்ட கருதுகோள்களை மையமாக வைத்தே இக்கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது. இலங்கையி லிருந்து ஏன் குடிபெயர்ந்தார்கள்? அக்குடி பெயர்வின் எதிர்காலப் போக்கு எத்தகையது? தொழில் வாய்ப்புக்கள் குடிபெயர்வில் எத்தகைய இடத்தை வகிக்கின்றன? நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் இக்குடி பெயர்வில் எத்தகைய பங்கினை வகிக்கின்றன? போன்ற வினாக்களுக்கு விடை காண்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

குறிப்பிட்ட ஆய்வின் காலப்பகுதியாக சுமார் 50 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இலங்கை அரசியலில் பெரு மாற்றத்தை ஏற்படுத்திய சிங்களம் மட்டும் அரச கருமமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து நடந்த 58 சிங்கள–தமிழ் இனக்கலவரம் இக்குடிபெயர் வின் புதிய போக்கின் ஆரம்பமாக அமைந்துள் ளது.[5] உண்மையில் அரசியல் ரீதியில் தமிழரில் ஒரு பிரிவினர் மிகச் சிறிய அளவினதாக இருந்த போதும் தம் சொந்த நாட்டில் சிங்களப் பெரும்பான்மை அரசு மேற்கொண்ட பாரபட்ச மான நடவடிக்கையின் விளைவாக அந்நாட்டை விட்டு மேற்குலகுக்குப் பிரதானமாக ஆங்கிலம் பேசும் நாடுகளுக்கும் குடிபெயரும் போக்கு காணப்பட்டது. அதிலிருந்து இன்று வரை இக்குடிபெயர்வின் போக்கினையும் அதன் தன்மையையும் எடுத்துக் காட்டலாம். மேற்கு நாடுகள் எனும் போதும் முக்கியமாகப் பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து, சுவிற்சர்லாந்து, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சுவீடன், கனடா, அவுஸ்திரேலியா போன்றனவே கருதப்படுகின்றன.

இலங்கையில் 1983 இல் இடம்பெற்ற பெரும் இனக்கலவரத்தை, தமிழினப் படுகொலையை அடுத்து இக்குடிபெயர்வின் வேகம் அதிகரித்ததெனலாம். முக்கியமாகக் கொழும்பிலும், ஏனைய தென்னிலங்கைப் பகுதியிலும் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந் தோரில் குறிப்பிடத்தக்க அளவினர் தம் தொழில் வாய்ப்பினைக் கைவிட்டு மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குப் பல வழிகளில் சென்றிருப்பதனை அறிய முடிகின்றது. இந்த ஆய்விலும் 1983 இன் பின்பாக இடம் பெற்ற இலங்கைத் தமிழரின் குடிபெயர்வே முக்கிய கவனத்தைப் பெறுகின் றது. 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடுத்து வடகிழக்கு மாகாணங்களில் நிலை கொண்ட இந்திய இராணுவத்தின் யாழ்ப்பாண மாவட்டம் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்தும் ஒரு தொகையினர் நாட்டை விட்டு வெளியேறினார்கள். இப்போக்கில் மற்றுமோர் அபிவிருத்தி 1990இன் பின்னர் இலங்கை அரசினால் இலங்கைத் தமிழர் வாழும் பிரதேசங் கள் மீது மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்

தடையையும், இராணுவ நடவடிக்கைகள் விமானக் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல், இயக்கங்களுக்கு உள்ளேயும் வெளியேயுமான இயக்க முரண்பாடுகள் என்பவற்றையும் அடுத்து ஏற்பட்டதாகும்.

இந்நிலைமைகளினால் கடந்த சுமார் இருபது வருடங்களாக இலங்கைத் தமிழர் பலர் தம் வாழ்விடங்களை விட்டு நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் அகதிகளாகப் புலம் பெயர்ந்துள்ள துர்ப்பாக்கிய நிலைமை இக்குடி பெயர்வில் அவதானிக்கலாம். பிரதானமாகப் பொருளாதார வல்லமையுள்ளோர் பிரச்சினைக் குரிய தமிழ்ப் பகுதிகளை விட்டு இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கோ அல்லது வெளிநாடு களுக்கோ இடம் பெயர்ந்து செல்கின்ற தன்மையை ஏற்படுத்தியிருந்தனர். அவ்வகை யில் வசதி வாய்ப்புள்ளோருள் கணிசமானோர் இப் பிரதேசங்களை விட்டு தங்கள் தொழில் முயற்சிகள், சொத்துக்களைக் கைவிட்டு வெளியேறியுள்ளனர். இப்பின்னணியில் மேற்கு நாடுகளுக்கான குடிபெயர்வில் எல்லாவற்றை யும் விட முதன்மை வாய்ந்த மாறிகளாக அரசியல் காரணிகள் செயற்பட்டிருப்பதனை நாம் கண்டு கொள்ளலாம். மலாயக் குடிபெயர் விலே பொருளாதார நோக்கே முதன்மை பெற்றிருந்தது.

மேற்குலகக் குடிபெயர்வானது குறுகிய காலத்தை மையமாகக் கொண்டதாகக் காணப்படவில்லை. தாங்கள் குடிபெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கி வாழ்விடங் களை சொந்தமாக அமைத்து நிலையான வாழ்க்கையை மேற்கொள்வதனை இங்கே அவதானிக்கலாம். சில சந்தர்ப்பங்களிலே மேலும் வசதி, வாய்ப்புக்களை அளிக்கும் நாடுகள் நோக்கி மீள் இடப்பெயர்வு செய்யும் தன்மையையும் அவதானிக்கலாம்.[6] முக்கியமாக பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற மேற்கு நாடுகளிலிருந்து கனடாவிற்கு இடம் பெயர்ந்து செல்லும் தன்மையைக் காணலாம். இப்போக்கிற்கு காரணமாக ஆங்கில மொழி பேசும் நாடு என்பது மட்டுமல்லாது, குடிபெயர் வோருக்கு அதிக வாய்ப்பு வசதிகளை வழங்கும் நாடு என்பதும் அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் மலாயக் குடிபெயர்வோ அங்கு தங்கி வாழ்விடங்களை அமைத்து வாழும் தன்மையற்ற தாக இடைத்தங்கலாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழரின் மேற்குலகக் குடிபெயர்வில் குடிபெயர்ந்த நாட்டின் மொழி பற்றிய அறிவோ, கலாசார வேறுபாடோ தடை அம்சமாகக் கொள்ளப்படவில்லை பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளுக் குச் சென்றோர் அந்தந்த நாட்டு மொழியைக் கற்றுத் தம் பிள்ளைகளுக்கும் அம் மொழியில் பயிற்றுவித்து அந்நாட்டு வாழ்க்கை முறைக்கு இசைவாக்கம் செய்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. குடிபெயர்வோரைப் பொறுத்து அந்நாடுகள் தனித்தனியான அணுகு முறை களைப் பின்பற்றிய போதிலும் குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் அந்நாடுகளின் கொள்கை களுக்கேற்ப செயற்பட்டு வருதலை அறிய முடிகின்றது. பெரும்பாலான இந்த நாடுகள் தத்தம் மொழிகளைக் கற்பித்து தம் தேசிய அடையாளத்துள் அவர்களையும் ஒருங்கிணைத் துச் செல்லும் கொள்கையினைப் பின்பற்று வதாக அறிய முடிகின்றது[7] இவ்வகையில் குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் தொழில் வாய்ப்புக்களுக்காவும் இருப்பிட வசதிகள்,

பிறவசதிகளுக்காகவும் அந்தந்த நாட்டு மொழியைக் கற்று அந்த நாட்டு அடையாளத்துள் இசைந்து போகும் தன்மையினை அவதானிக்கலாம் இத்தகைய போக்கினை மலாயக் குடிபெயர்வு பொறுத்துக் காண முடியாது.

மலாயாவிற்கு குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் தம் உழைப்பின் பெரும் பகுதியை தம் சொந்த நாட்டிற்கு அனுப்புவதனையும் நோக்காகக் கொண்டிருந்தனர். அதனால் மலாயாவை உழைக்கும் இடமாக ஓர் இடைத் தங்கல் நிலமாகவே கருதிச் செயற்பட்டனர். தம் முழுவிசுவாசத்தையும், ஈடுபாட்டையும் தங்கள் நாட்டின் மீது, பிரதேசம், மீது உறவினர் மீது வைத்திருந்தனர். அதனால் தங்கள் பிறந்த ஊர்களுக்குப் பலதரப்பட்ட சேவைகளை ஆற்றி வந்தனர். பாடசாலைகள், கோவில்கள், சனசமூக நிலையங்கள், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பொதுக் கட்டிடங்களை அமைத்தல் போன்ற பல நற்காரியங்களை மலாயாவில் பல்வேறு சங்கங்களை அமைத்துச் செயற்பட்டு வந்தனர். மேற்குலகக் குடிபெயர்வில் அத்தகைய அதீத ஈடுபாடு இல்லாதது காணப்படுவதுடன் திரும்பவும் தங்கள் தாய் நாட்டிற்கு வந்து வாழும் விருப்பு மிக மிகக் குறைவாகவே காணப்படுவதனையும் அவதானிக்கலாம். இவர்களது உழைப்பின் பெரும்பகுதி அந்தந்த நாடுகளில் வீடுகளை வாங்குவதிலும், நிலையான முதலீட்டைச் செய்வதிலும், தங்கள் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதிலும் பயன்படுத்துவதனைக் காண முடிகின்றது. இவ்வகையில் குடியேறிய நாட்டில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்வதைத் தம் நோக்காகக் கொண்டுள்ளதனைக் காணலாம்.[19] இலங்கையில் காணப்படும் அரசியற் பிரச்சினைகளைக் காரணம் காட்டி உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள் அரசியல் ரீதியாக அகதி அந்தஸ்துக் கோரிக்கையை முன்வைக்கும் போது ஒரு பிரிவினர் மேற்கு நாடுகளுக்குப் பொருளாதார நோக்கங்களுக்காக வந்து அரசியல் ரீதியாகத் தாங்களும் பாதிக்கப்பட்டவர்கள் என்று அகதி அந்தஸ்துக் கோரி நிற்பதனையும் நாம் காண்கிறோம்.

மேற்குலகில் இலங்கைத் தமிழரின் எண்ணிக்கையைப் பொறுத்து பூரணமான தகவல்களைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. பிரித்தானிய அகதிகள் கவுன்சிலின் இலங்கைத் திட்டத்திற்கான இணைப்பாளர் திரு. மயன்விஜி அவர்களுடனான சந்திப்பின் போது புகலிடம் கோரிய இலங்கைத் தமிழர் தொடர்பான பல தகவல்களைப் பெற முடிந்தது.[19] அகதிகளுக்காகவும், அகதிக் கோரிக்கைகளை முன் வைப்பவர்களுக்காகவும் இந்த அமைப்பு பாராட்டத்தக்க சேவைகளைச் செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. திரு. மயன்விஜி வழங்கிய ஆதாரங்களில் இருந்தும் 2002 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்த கனடா நாட்டு கௌரவ உயர் ஸ்தானிகர் வழங்கிய தகவல்களில் இருந்தும் சுமார் 600,000 இலங்கைத் தமிழர் மேற்கு நாடுகளில் வாழ்வதாக அறிய முடிகின்றது.[20]

இலங்கைக்கு வெளியே அதிக இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் நாடாக தற்போது கனடா விளங்குகின்றது. வெளிநாடுகளில் இருந்து வெளியாகும் பல பத்திரிகைகளில் இத்தொகை 2003 இல் 300,000 ஆகக் குறிப்பிடப்படுகின்றது. இத்தொகையை இலங்கைக்கான கனடியத் தூதுவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்.[21] பொதுவாக மேற்கு நாடுகளில் எடுக்கப்படும்

குடிசன மதிப்பீட்டு அறிக்கைகளில் இலங்கைத் தமிழர் எனத் தனியாக அடையாளம் காட்டுவது காணப்படாதிருக்கின்றது. தாய்மொழி எது என்று வினவப்படும் போது இலங்கைத்தமிழ் எனக் கொடுக்கப்படும் போதே அவர்கள் இலங்கைத் தமிழர் என அடையாளம் காணப்படு கின்றனர். குடிபெயர்ந்தவர்களுடைய பிள்ளை கள் தாய்மொழி தமிழ் என்று குறிப்பிடாது விட்டால் அவர்களை இலங்கைத் தமிழர் என்று அடையாளம் காண்பது முடியாததாக இருக்கின்றது.

1998 இல் ஐரோப்பிய சங்க நாடுகளில் 150,000 இலங்கையர் வாழ்ந்து வருவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.[22] இன்றைய நிலையில் இது மேலும் அதிகமானதாக மாறியிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 2000 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டில் ஜேர்மனியில் 60,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்வதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்திலும் 60,000 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர் வாழ்வதாக மதிப்பிடப்படுகின்றது. இத்தொகை இன்று இன்னும் அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பிரான்சில் 60,000 இலங்கைத் தமிழர் வாழ்வதாக மதிப்பிடப்படுகின்றது. பின்வரும் அட்டவணை மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர் குடித் தொகையை சுமாரான வகையிலே காட்டுவதாக அமைந்துள்ளது.[23]

| | |
|---|---|
| கனடா | 300,000 – 2003 |
| ஐக்கிய இராச்சியம் | 60,000 – 2000 |
| ஜேர்மனி | 60,000 – 2000 |
| பிரான்ஸ் | 60,000 – 2000 |
| நெதர்லாந்து | 7,046 |
| நோர்வே | 10,335 – 2001 |
| சுவிற்சர்லாந்து | 30,192 – 1996 |
| இத்தாலி | 23,652 – 1997 |
| சுவீடன் | 8,000 – 2000 |
| டென்மார்க் | 14,199 – 1998 |
| ஐக்கிய அமெரிக்கா | 24,575 – 2000 |
| அவுஸ்திரேலியா | 60,000 |

**Srilankan Tamil Migration - http// w.w.w/ tamiltig.net/ features/ Tamil migration. html**

இக் குடித்தொகைத் தரவுகள் 100க்கு 100 வீதம் சரியானவையாக இல்லாவிடினும் இலங்கைத்தமிழர் 1980களின் பின்னராக இலங்கையில் ஏற்பட்டு வந்த அரசியற் பிரச்சினைகளால் நாட்டைவிட்டு வெளியேறி மேற்குறிப்பிட்ட நாடுகளில் பெருமளவில் வாழ்வதை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. 1998இல் மட்டும் ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு 6652 பேர் அகதி அந்தஸ்துக்கான கோரிக்கையை முன்வைத் தார்கள் என்றும் இதில் அரைப்பங்கிற்கு மேல் ஐக்கியஇராச்சியத்தின் அகதிக் கோரிக்கை கோரியவையாகவும் காணப்பட்டன. இதில் கோரிக்கை விடுக்கப்பட்ட நாடுகளுக்கான விண்ணப்பங்களில் 51.1%ற்கு பிரான்சும் 1%ற்கு ஆஸ்திரியாவும் அகதி அந்தஸ்த்து கோரிக்கையை வழங்கியதாகவும் அறிகின் றோம்.[24]

மேற்குலகிற்கான இலங்கைத் தமிழரின் குடிபெயர்வின் முக்கியத்துவம் இன்னோர் வகையிலும் எடுத்துக்காட்டப்படத்தக்கது. தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் மக்கள் தொகையில் 1/3 பங்கினரின் வருமானம்

வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் இலங்கைத் தமிழரின் பணமாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.[25] இராணுவ நடவடிக்கை யாலும், கடற்பாதுகாப்பு வலயத் தடைச் சட்டங்களினாலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் இயல்பான பொருளாதார வாழ்வு, விவசாய, மீன்பிடி நடவடிக்கைகள் தடைப்பட்டுப் போக அங்குள்ள மக்களின் 1/3பகுதியினரின் வருமான மூலமாக இந்த வெளிநாட்டுப் பணம் இருப்பது இங்கு அவதானிக்கத்தக்கது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய (2003) குடித்தொகை சுமார் 500,000 மக்களாவர்.[26] (அரச அதிபர் கணிப்பீடு) 1983 இலிருந்து சுமார் 10 லட்சம் (I Million) இலங்கையர் இடம் பெயர்ந்திருப்பதாகவும் அவர்களுள் 800,000பேர் தங்கள் சொந்த வீடுகளில் இருந்து வெளியேறி வாழ்வதாகவும் அறிகிறோம்." (High Level Working, Group in Asylum and Migration Draft Active Plan on Sri Lanka P.1) இந்த எண்ணிக்கையில் 80% ற்கு மேற்பட்டவர்கள் இலங்கைத் தமிழர் என்பது கவனிக்கத்தக்கது. 19வருட உள் நாட்டுப் போரினால் 60,000ற்கு மேற்பட்ட மக்கள் இறந்தும் சுமார் 1 மில்லியன் மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தும், சுமார் 600,000 மக்கள் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.[28] (European parliam ent Resolution. 14 March 2002 PS. TARROV - 0135 Sri Lanka) 1989 – 1998 காலப்பகுதியில் இலங்கையில் இருந்து பெறப்பட்ட அகதி அந்தஸ்த்துக்கான விண்ணப் பங்களில் 80%ற்கு அதிகமானவற்றிற்குக் கனடாவும், 74% ற்கு அதிகமானவற்றிற்குப் பிரான்சும், வெறும் (1%ற்கு) வீதத்திற்கு மட்டும் ஐக்கிய இராச்சியமும் அகதி அந்தஸ்து வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.[29] (Refugee Council Response to U.K Home Secretary's, Lisbon Proposals on Asylum: A Discussion Paper. P.2)

மேற்காட்டப்பட்ட தகவல்கள் இலங்கைத் தமிழரின் மேறகுலகிற்கான குடிபெயர்வின் முக்கியத்துவத்தையும், தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள் இலங்கைத்தமிழர் மீதாக எத்தகைய கடும் போக்குக் கொள்கை யை மேற்கொண்டிருந்தனர் என்பதனையும் விளங்கவைக்கப் போதுமானவையாக இருக்கின்றன. தங்கள் தாயகப் பிரதேசத்தில் அமைதியாக வாழ்ந்து வந்த மக்கள் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையாலும், விவசாய, பொருளாதார, மீன்பிடி நடவடிக்கை களைத் தடை செய்தமையாலும் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வாழ்வு முற்றாகவே நலிவடைந்து அதன் அனைத்து அபிவிருத்திகளும், செழிப்பும் இந்த மனித வள இடப்பெயர்வால் பலவீனமுற்றுள்ளது.

மேற்குலகிற்கான இலங்கைத் தமிழர் குடிபெயர்வு தமிழீழப் போராட்டத்திற்கு ஒரு சர்வதேசப் பரிமாணத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இலங்கை அரசின் தமிழின விரோத நடவடிக்கையால் நாட்டை விட்டு வெளியேறிய இளைஞர் குழாம் இலங்கையில் தனி நாடொன்று அமைப்பதற்கான முயற்சியில் சர்வதேச ரீதியிலான பிரசாரத்தைச் செய்து வந்ததுடன், இலங்கை அரசின் தமிழின விரோத நடவடிக்கைகளை உலக அரங்கில் வெளிக் காட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது. மேற்குல

கின் பிரதான நகரங்களில் தங்கள் அமைப்புக் களை ஏற்படுத்தி இலங்கை அரசிற்கு எதிரான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் பிரசாரம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், ஒலிபரப்பு, ஒளிபரப்பு இவ்வாறு இலங்கை அரசின் தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகளை உலக அரங்கில் எடுத்துக் காட்டி இலங்கை அரசாங்கத்திற்கு தர்ம சங்கட மான நிலையை ஏற்படுத்தினர். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு இலங்கை அரசு செய்துவரும் மனித உரிமை மீறல்கள், அடக்கு முறைகள், பாரபட்சமான ஒழுங்குபாடுகள் எனப் பலவாறாக அநீதிகளை எடுத்துக்காட்டி அந்நாடுகள் உதவிகளை வழங்காதிருக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். இவ்வாறு சர்வதேச அரங்கில் இலங்கை அரசிற்கு பெரும் நெருக்கடியினை கொடுத்தார்கள். அகதிக் கோரிக்கைகளும், இலங்கை அரசின் தமிழின அடக்கு முறைகளும், ஐரோப்பிய மேற்குலக நாடுகளை இப்பிரச் சினையில் தமது கவனத்தைத் திருப்புவதற்கு வாய்ப்பை ஏற்படுத் திக் கொடுத்தன. சர்வதேச மன்னிப்புச்சபை, மற்றும் ஐக்கியநாடுகள் சபையின் பல்வேறு அமைப்புக்கள், அரசு சாரா நிறுவனங்கள் மூலம் ஈழத் தமிழருக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகளை சர்வதேசமயப் படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் மேற்குலக நாடுகளில் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவான தீவிர பிரசார இயக்கம் இவர்களாலே நடத்தப்பட்டதுடன், பெருமளவு நிதியும் இவர்களாலே திரட்டிக் கொடுக்கப்பட்டது. இந்த நிதி மூலம் இலங்கை அரசாங்கத்திற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. இத்தகையதொரு சூழ்நிலை மலாயக் குடிபெயர்வின் போது காணப்பட வில்லை.

இலங்கைத் தமிழரிடையே வழக்கிலுள்ள சமூக அமைப்பிலே முக்கிய மாற்றங்களை மேற்குலகிற்கான குடிபெயர்வு ஏற்படுத்தியிருக் கின்றது. பழமை பேணும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட இச் சமூகத்திலே தொழில் முறைமை, சாதியமைப்பைப் பொறுத்து முக்கியமான மாற்றங்கள் அபிவிருத்திகள் ஏற்பட்டன. இந்த மாற்றங்கள் வெளிநாட்டுக் குடிபெயர்வால் பெறப்பட்ட பண வலிமையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டவையாகும். இலங்கைத் தமிழர் சமுதாயத்திலே வறுமை நிலையின் காரணமாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பல விதங்களில் உயர் சாதியினர் என்போரிடமிருந்து வேறுபடுத்தப்பட்டு வந்தனர். நிலச்சொத்துரிமை, ஒழுங்கான இருப்பிடவசதியின்மை, தொழில் முயற்சிகள், கல்வி அறிவு பெறுவதற்கான வாய்ப்பின்மை, நாகரிகப் பண்பு குறைவாகக் காணப்பட்டமை, உயர் வகுப்பினரின் பொருளாதார முயற்சிகளில் தங்கியிருக்கும் தன்மை என்பன இம்மக்களை மேலும் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பினை அளிக்காதவாறு செய்தன. ஆனால் ஓரளவு பொருளாதார அந்தஸ்துப் பெற்று வெளிநாடு களுக்குக் குடிபெயர்ந்த இந்தப் பிரிவினர் பொருளாதாரத் துறையில் வளம் பெற்றதனைத் தொடர்ந்து அவர்களது மோசமான நிலைமை மாற்றம் பெற்றது. அதனால் சமூக, பொருளாதர அந்தஸ்திலும் மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக ஏற்கனவே அவர்களால் மேற்கொள் ளப்பட்டு வந்த பரம்பரைத் தொழில்கள் கைவிடப்பட்டு வேறு தன்மையிலான தொழில் முயற்சிகளில் இவர்கள் ஈடுபடுவதனைக் காணமுடிகின்றது. இவ்வகையில் இலங்கைத் தமிழரிடையே நிலவிய சாதி அமைப்பு முறையின் தளர்விற்குப் பொருளாதார ரீதியில் வழி அமைக்கப்பட்டது. மலாயக் குடிபெயர்வோ

பழமை பேணும் தன்மை கொண்டதாகக் காணப்பட மேற்குலகக் குடிபெயர்வோ அதனை உடைக்கும் தன்மையினதாகக் காணப்பட்டது.

மேற்குலக நாடுகளுக்கான இலங்கைத் தமிழர் குடிபெயர்வின் முக்கிய பண்பு அச்சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக, அனைத்துப் பிரிவினரின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவியதாகக் காணப்பட்டமையாகும். முன்னர் இடம்பெற்ற மலாயக் குடிபெயர்வு வளர்ந்து வந்த மத்திய வகுப்பிலிருந்து இடம்பெற்றதாக அமைந்திருந்தது. முக்கியமாக ஆங்கிலக் கல்வியை ஓரளவு பெற்றுக் கொண்ட மேற்தட்டு வகுப்புக்களில் இருந்து தான் பெருமளவிற்கு அக்குடிபெயர்வு இடம் பெற்றது. அதனால் அப்பிரிவினரிடையே தான் அதன் செல்வாக்கும், அபிவிருத்தியும், பலாபலன்களும் ஏற்பட்டன. ஆனால் இக்குடி பெயர்வோ இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்துச் சாதிப் பிரிவுகளையும் உள்ளடக்கிய தாக, அனைத்துச் சமூகப் பிரிவிலும் தாக்கத்தை அபிவிருத்தியை ஏற்படுத்தியதாக அமைந்துள்ளது. இலங்கைத் தமிழர் சமூகத்தில் பொருளாதார, சமூக வேறுபாடுகளோ, எல்லைகளோ இல்லாத வகையில் அனைத்துச் சமூகப் பிரிவுகளிலிருந்தும் இக் குடிபெயர்வு இடம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழரின் மேற்குலகிற்கான குடிபெயர்வு அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களின் சமூக, பண்பாட்டு, கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது. இவ்வகையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் கல்வி நிலையங்கள், கோவில்கள், சனசமூக நிலையங்கள், வைத்திய சாலைகள், மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் என்பனவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. தங்கள் சொந்த ஊர்ப்பெயர்களிலும், பாடசாலைகளின் பெயர்களிலும், விளையாட்டு, சனசமூக நிலையங்களின் பெயர்களிலும், பழைய மாணவர்கள் என்ற பெயர்களிலும் தம்மை அடையாளம் காட்டிச் சங்கங்கள் அமைத்து இப்பணிகளைச் செய்து வருகின்றார்கள். இப்போக்கு மலாயக் குடிபெயர்வின் போதும் சிறப்புற இயங்கியதனை நாம் காணலாம். தங்கள் கிராமத்துடன், கோவில்களுடன், பாடசாலைகளுடன், சனசமூக நிலையங்களுடன் தம்மை அடையாளப்படுத்தி தாம் வாழ்ந்த பகுதிகளுக்குச் சேவையாற்றும் விருப்பு இங்கே காணப்படுவதனை அவதானிக்கலாம். தாயகப் பிரதேசத்தில் அமைதி குன்றிய நிலையின் போது ஓரளவிற்குக் கைவிடப்பட்டிருந்த இம் முயற்சிகள் தற்போது மீண்டும் துரித கதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன தாம் குடிபுகுந்த நாடுகள் அனைத்திலும் இவ்வாறான சங்கங்கள் அமைத்துச் செயற்படுவதனைப் பரவலாகவே காண்கின்றோம்.

மேற்கு நாடுகளில் குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் அவ்வவ் நாடுகளில், பிரதான நகரங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் பொருளாதார, வர்த்தக நடவடிக்கையிலே ஈடுபட்டுச் சாதனை படைத்திருக்கின்றனர். லண்டன், ரொரன்ரோ, பரிஸ், பேர்ன் போன்ற நகரங்களில் பிரபலமான வர்த்தக நிலையங்களை அமைத்து பொருளாதார வலுவுள்ளவர்களாக மாறி வருகின்றனர். தமிழர் வர்த்தக சம்மேளனங்களை அமைத்து தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து பரிசு சான்றிதழ்கள், கேடயங்கள் வழங்கி கௌரவிக்கின்றனர். கனடா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில்

இருந்து ஒளி, ஒலிபரப்பாகும் தமிழ் தொலைக் காட்சி, தமிழ் வானொலி, மற்றும் தமிழ் பத்திரிகைகளில் வெளிவரும் விளம்பரங்களை ஒருவர் அவதானித்தால் எந்தளவிற்கு இவ் வர்த்தக நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்துள் ளன என்பதனை விளங்கிக் கொள்ளலாம். கனடா வில் இருந்து வருடாவருடம் வெளிவரும் 'தமிழன் வழிகாட்டி' என்ற பெரிய அளவிலான கையேட்டை வைத்துக் கொண்டே கனடாவில் இலங்கைத் தமிழரின் பல்வேறுபட்ட பொருளா தார, சமூக, கலாசார நடவடிக்கையினைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.[30] இதே போன்றே ஐக்கிய இராச்சியம்– தமிழ் ஒலை, பிரான்ஸ் போன்றவற்றிலும் இதையொத்த கை யேடுகள் (Directories) வருவதாக அறிகின் றோம். மலாயக் குடிபெயர்வில் வர்த்தக நிறுவனங்களைப் பெரியளவில் நடத்திப் பொருளாதார நடவடிக்கைகளை வளர்ச்சிப் படுத்தும் நிலை காணப்படவில்லை.

மேற்கு நாடுகளுக்குக் குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் தாம் குடியேறிய நாடுகளில் தமது அடையாளத்தை, கலாசாரத்தைப் பேண முற்படுவதனையும் அதற்குப் பல நடவடிக்கை களை மேற்கொள்வதனையும் அவதானிக் கலாம். இந்துக் கோவில்களை அமைத்தல், தமிழ் வகுப்புக்களை நடத்தல், பரதநாட்டியம் கற்றுக் கொடுத்தல், சங்கீதம் கற்றல், தென்னிந்திய இசைக்கலைஞர்களை அழைத்து வரல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடுதல், தமிழ் தொலைக்காட்சி, வானொலி பார்த்தல், கேட்டல் இவ்வாறான பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இளைய தலை முறையினரிடையே தாய்மொழியிலும், தமிழ்க் கலாசாரத்திலும் அதிக ஈடுபாடு காணப்படாத தன்மையே காணப்படுகின்றது. அந்தந்த நாடுகளின் மொழி மூலமான கல்விப் போதனைகள் அவர்களை எமது கலாசாரத்தி லிருந்து அந்நியப்படுத்துவதாகவே காணப்படு கின்றது. பெரும்பாலான பெற்றோர் வீட்டு மொழியாக ஆங்கிலத்தை உபயோகப் படுத்து வதால் தமிழ் மொழியறிவு இல்லாத பிள்ளை களையே காணமுடிகின்றது தமிழ் மொழி தெரியாது போனால் தமிழ் அடையாளமே இல்லாது போய்விடும். ஆங்கிலமொழி பேசாத நாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் உரையாடுவதையும் தமிழ்க் கலாசாரத்தைப் பெருமளவு பின்பற்று வதையும் அவதானிக் கலாம். இவ்விடயத்தில் பெற்றோர் தங்கள் வீடுகளில் தமிழ்மொழி மூலம் பேசுவதைக் கட்டாயப் படுத்தல் அவசியமான தாகும். ஏனைய நாட்டவர் தத்தம் வீடுகளில் தமது சொந்த மொழியில் உரையாடும் போது எம் தமிழர் அவ்வாறு செயற்படாதிருப்பது எமது அடையாள த்தை இல்லாமல் செய்ய உதவுவதாகவே அமைந்து விடும். குடியேறிய நாடுகளில் போட்டிக்குக் கோவில்களும், சங்கங்களும் அமைப்பது எமது அடையாளத்தை வளர்ப் பதற்குப் பதில் அவற்றில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி எமது அடையாளத்தைப் பலவீனப் படுத்துவதாகவே அமைந்துவிடும். மலாயக் குடிபெயர்வின் போதும் கோயில் அமைத்தல், தமிழ்ப் பாடசாலைகள் நிறுவுதல், பண்ணிசைப் பயிற்சி, ரசிக ரஞ்சனா சபைகள், சங்கீத வித்வ சபைகள் அமைத்தல், பரத நாட்டியம் கற்பித்தல், தமிழ் நாட்டிற்கு அனுப்பிப் பிள்ளைகளை இத்துறைகளில் படிப்பித்தல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை இங்கு சுட்டிக் காட்டத் தக்கது. மொழியை மறந்தால் தம் அடையாளத்தை இழந்து விடுவர் என்பது குடிபெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்த பல நாடுகளின் அனுபவமும் வரலாறு மாகும்.[31]

1983 ஜூலை இனக் கலவரத்தின் பின்பாக இலங்கைத் தமிழரில் பல லட்சக்கணக்கானோர் மேற்குலகிற்குப் புலம் பெயர்ந்துள்ளனர். இது இலங்கையின் முழுமைக்குமான பெரும் மனித இழப்பாகும். மனித வளத்தைப் பொறுத்து தமிழர் தாயகப் பிரதேசமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தமிழர் வெளியேற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் தாயகப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்பும் பாரிய பணியில் மேற்கு நாடுகளில் வாழும் ஈழத்தமிழரை, அவர்கள் முதலீட்டை, அவர்கள் பெற்று வரும் தொழில்நுட்ப, விஞ்ஞான, பொறியியல், மருத்துவ, கணனி, வர்த்தக, கட்டுமான அறிவினைப் பெற்று உன்னதமான பெருவளர்ச்சியை இப்பகுதிகளில் ஏற்படுத்தக் கூடிய அரிய வாய்ப்புக் காணப்படுகின்றது. சுதந்திரத்தின் பின்பான காலத்திலிருந்தே இலங்கை அரசின் பாரபட்ச நடவடிக்கைகளால் இலங்கைத் தமிழர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பயிற்றுவிக்கும் வாய்ப்புக்கள் பெரு மளவுக்குத் தடைப்பட்டிருந்தன. பெரும் பான்மைச் சிங்கள புத்திஜீவிகள், தொழில் நுட்பத்துறையைச் சேர்ந்தோர், பல்துறை சார்ந்த தொழிற்பிரிவினர், அரசாங்க புலமைப் பரிசில், மற்றும் நிதியுதவியுடன் வெளிநாடுகளுக்குச் சென்று இத்துறை சார்ந்த அறிவினைப் பெற்று வர, இலங்கைத் தமிழர் அத்தகைய வாய்ப்பு பெறாமலே இருந்தனர். இலங்கை அரசாங்கம், தனியார் துறையினர் மூலம் பல துறைகளில் கிடைக்கப் பெற்ற இத்தகைய வெளிநாடு களிலான பயிற்சிகளுக்குச் சிங்கள மக்களே தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர். ஆனால் இப்புதிய சூழ்நிலையில் மேற்குலகின் தலை சிறந்த பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்றவற்றில் பல இலங்கைத் தமிழ் மாணவர்கள் பல்துறை சார்ந்த துறைகளில் தங்கள் படிப்பையும், மேற்படிப்பு களையும் பெற்று வருகின்றனர். அவர்களது அறிவைப் புதிதாகக் கட்டியெழுப்பும் வடக்குக் கிழக்கு அபிவிருத்திகளில் நன்கு பயன்படுத்த வாய்ப்புண்டு. அதற்கு இம்மாணவர்களின் பெற்றோர் தமிழ் அடையாளத்தையும் தாயகப் பற்றையும் மறக்காத வகையில் அவர்களை வளர்த்து வருதல் அவசியமானதாகும். மேற்கு லகின் பல்கலைக்கழகங்களில் கல்விகற்று வரும் பல்துறை சார்ந்த மாணவர்களை ஒரு வலைப் பின்னல் அமைப்பிற்குள் ஒன்றிணைத்து தமிழீழ சர்வதேச மாணவர் அமைப்பு ஒன்று இந் நோக்கில் செயற்பட்டு வருவதும் ஏற்கனவே சில துறைகள் பொறுத்த இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.[32] கனடா, ஐக்கியஅமெரிக்கா, பெரியபிரித் தானியா, அவுஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் உள்ள பல்கலைக் கழகங்களின் இலங்கைத் தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து இத்தகைய அமைப்பொன்றை ஏற்படுத்திச் செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் இளைஞர் அறிவு ஜீவிகளை வரவழைத்து தமிழர் தாயகப் பிரதேசத்தைப் பல்துறைகளிலும் கட்டியெழுப்பும் வாய்ப்பும் மிகப் பிரகாசமாகவே தென்படுகின் றது. பாரதியார் பாடியதைப் போல் "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்பதற்கு மிக வாய்ப்பானவர்களாக இவர்கள் இருப்பதனை அறிய முடிகின்றது. இந்த அறிவு ஜீவிகள் பலரிடையே தம் புலமைத்துவ அறிவு தமது மக்களுக்குப் பயன்படாமல் வேறு எவருக்கோ பயன்படுகின்றது என்ற ஆற்றாமை உணர்வு விரவி நிற்பதையும், ஏதோ ஒரு வகையிலாவது தமது மக்களுக்கு தமது பிரதேசத்திற்கு

நன்மையளிக்கும் வகையில் எவற்றையாவது செய்யவேண்டும் என்ற துடிப்பு பரவலாக இருப்பதனையும் இத்தகைய பலருடன் அளவளாவிய போது அறியும் வாய்ப்புக் கிடைத்தது.[33]

மேற்கு நாடுகள் பலவற்றிலும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழருள் குறிப்பிடத்தக்கோர் சிறந்த பொருளாதார வசதியுடன் பலதுறைகளில் சிறப்புற்றிருப்பதனைக் காண முடிகின்றது. நாட்டில் அமைதிச் சூழல் ஏற்படுமிடத்து இவர்கள் மூலமாகக் குறிப்பிடத்தக்களவு முதலீட்டினை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் முதலீடு செய்ய வாய்ப்புண்டு. மேற்கு நாடுகளின் முக்கிய தலைநகரங்கள் பிரதான நகரங்களில் வர்த்தக நடவடிக்கையில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர் சிறப்புற்று விளங்குவதனைக் காணலாம். குடித்தொகை பொறுத்தும் சில இடங்களில் மிக நெருங்கி வாழ்வதை அவதானிக்கலாம். கனடாவில் ரொரன்றோ, ஸ்காபரோ பகுதிகளிலும், பிரான்சின் பரிஸ், லாசப்பல் பகுதியிலும், ஐக்கிய இராச்சியத்தில் ஈஸ்ற்காம், ஹரோப் பகுதிகளிலும் அவுஸ்திரேலியாவில் சிட்னி, பேர்த், மெல்போர்ன் நகர் பகுதிகளிலும் நெருங்கி வாழ்வதனையும், வர்த்தக நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் சிறப்புற்றிருப்பதனையும் காண்கின்றோம்.[34] இவர்கள் மூலமாகத் தமிழர் தாயகப் பகுதிகளில் பல்வேறு முற்போக்கான திட்டங்களில் முதலீட்டினைச் செய்ய வாய்ப்புக் காணப்படுகின்றது. அமைதி ஏற்படுமிடத்து இவர்களுள் குறிப்பிடத்தக்க தொகையினர் தாயகப் பிரதேசத்திற்கு வந்து தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் விருப்புள்ளவர்களாக இருக்கின்றனர்.[35] இத்தகைய ஒரு நிலை மலாயக் குடிபெயர்வின் போது காணப்பட்டாலும் பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்தப் படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் இளைஞர் சிலரிடையே வளர்ந்து வரும் வன்முறைக் கலாசாரம், ஏமாற்றுவேலைகள், சட்டத்திற்கு அமைய நடக்காத தன்மை என்பவற்றால் இங்கு வாழும் இலங்கைத் தமிழர் அனைவருமே வெட்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் அங்காங்கே புலம் பெயர்ந்தவர்களால் இவ்வாறான சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அண்மை காலமாக மேற்குலகின் பிரதான நகரங்களில் இடம்பெற்று வரும் இளைஞர் படுகொலைகள், ஏமாற்றுவேலைகள் அந்நாடுகளின் சட்ட மேற்பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்திருப்பதனை அறிய முடிகின்றது. புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழரிடையே உள்ள பொதுநல அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் இவற்றில் அதிக கவனத்தைச் செலுத்தி இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறாமல் இருப்பதனை உறுதி செய்வதுடன் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பிரிவினருக்குப் போதிய உதவிகளை வழங்கி ஆவன செய்வதும் அவசியமாகும். கனடாவில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டோர் மீது பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை மக்கள் அமைப்புக்கள் ஒத்துழைப்பின் காரணமாகப் பெருமளவு குற்றச் செயல்கள் குறைந்திருப்பதனைக் காணமுடிகின்றது.[36] அண்மைக்காலமாக மேற்குலக நாடுகளில் பலவும் அகதிகள் தொடர்பான அணுகு முறையில் கடும் போக்கைப் பின்பற்றி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தனிப்பட்ட நாடுகள் அகதிகள் தொடர்பாகப் பின்பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டு ஐரோப்பிய சங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள், அதனோடு இணைந்து செயற்படும் நாடுகள் எல்லோருக்கும் பொதுவான கொள்கை ஒன்றைப் பின்பற்ற முடிவு செய்து மிக இறுக்கமாக அகதிகள் பிரச்சினையை அணுகி வருகின்றன. இந்நாடுகள் பலவற்றிலும் வாழும் பொது மக்களிடையே அகதிகளுக்கு எதிரான வெறுப்புணர்ச்சி வளர்ச்சி அடைந்து வருவதனையும், பொதுசன தொடர்பு சாதனங்கள் இவ் வெறுப்புணர்வை வளர்ச்சிப் படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. அவுஸ்திரேலியா ஐக்கிய அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஸ்கன்டிநேவிய நாடுகள் பலவும் இவ்வாறான அணுகு முறையைப் பின்பற்றி வருகின்றன. தங்களுடைய வரிப்பணம், தங்களுடைய பொருளாதார பொதுநலச் சேவைகளைக் கவனிக்காது பொருளாதார நோக்கில் அகதிப் புகலிடம் கோருபவர்களுக்குச் செலவழிக்கப்படுவதனை இவர்கள் கடுமையாகக் கண்டித்து வருகின்றனர். அண்மையில் இலங்கையும் பாதுகாப்பான நாடுகள் (White List) என்ற அட்டவணைக்குள் வகைப்படுத்தப்பட்டு மனித உரிமைகள் அதிகளவு பாதிக்கப்படாத நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.[37] இன்று இலங்கையில் மனித உரிமைகள் பேணுவது பொறுத்துப் பெரியளவிலான மாற்றம் ஏற்படாத போதும் பாதுகாப்பான நாடுகள் என்ற பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை மேற்கு நாடுகள் அகதிகள் தொடர்பாக இதுவரை பின்பற்றி வந்த கொள்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டதனையே காட்டுகின்றது. இத்தகைய போக்கு மேற்குலக நாடுகளில் புலம் பெயர்ந்து பலதரங்களில் வாழும் மக்களிடையே அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளது. பத்து வருடங்களுக்கு மேலாக இந்த நாடுகளில் வாழ்ந்தவர்களையே திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் இந்த நாடுகள் ஈடுபடுவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளாகவே இவை கருதப்பட வேண்டியன. இப்பின்னணியில் மேற்குலக நாடுகளில் புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்து கோரியிருக்கும் பல்லாயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்கள் பாரிய அச்சுறுத்தலை எதிர் நோக்கியவர்களாக இருக்கின்றனர். இலங்கையில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்தும் ஆக்க பூர்வமான எந்த நடவடிக்கையும் அரசால் மேற்கொள்ளப் படாத சூழ்நிலையில், யப்பானில் நடந்தஉதவி வழங்கும் நாடுகள் கூட்டத்திலே விடுதலைப் புலிகள் பங்குபற்றாது புறக்கணித்து வரும் நிலையில் இதுவரை நடந்த ஆறு சுற்று பேச்சுவார்த்தைகளின் போது நடைமுறைப் படுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங் களையே நடைமுறைப்படுத்தாத நிலையில் அகதிகள் தொடர்பாக மேற்கு நாடுகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாரதூரமானவையாகவும் அச்சந்தருவன வாகவும் அமைந்துள்ளன.

## அடிக்குறிப்புக்கள்

1. சத்தியசீலன்,ச;_1980, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மலேசியாவுக்கு 1940 வரை நடைபெற்ற குடிபெயர்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வரலாற்றில் முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை (பதிப்பிக்கப்படாதது).
2. சத்தியசீலன்,ச; 1992, யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து இடம்பெற்ற சர்வதேசக் குடிபெயர்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கான நிதியுதவி பெற்று மேற் கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, யாழ்ப்பாணம்.
3. Chelliah, J.V; 1922, **A Century of English Education :_Tellippalai,** The American Cetlon Mission Press
4. அருமைநாயகம், க; 1976, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி திருக்கேதீச்சரம். திருக்குடத்திருமஞ்சன மலர், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை வெளியீடு, கொழும்பு, பக். 72–82 ஆறுமுகம், வ. கல்விப் பாரம்பரியங்கள், கல்விக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1994 அத் 1.
5. சத்தியசீலன், ச; 1987, மலாயக் குடிபெயர்வும், யாழ்ப்பாண சமுகத்தில் ஏற்பட்ட விளைவுகளும் தமிழ்க்கலை தமிழ் 5, கலை 12, தஞ்சைப் பல்கலைக்கழக ஆய்வேடு, பக். 99– 108.
6. **Malayan Ceylonese Association Silver Jubilee .......,** Number, Jaffna, pp. 23 - 24
7. சத்தியசீலன், ச; மலாய்க் குடிப்பெயர்வும்......, பக். 108
8. மேற்படி. பக். 105.
9. ஆசிரியர் மலாய இலங்கையர் சங்கத்தினருடன் மேற்கொண்ட நேர்முக விசாரணைகளின் போது பெறப்பட்டது.
10. சத்திய சீலன்,ச; 1994, இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள் யாழ்ப்பாணம், .
11. Tambiah, S.J; 1986, **Sri Lanka : Ethnic Fratricide and the Dismantling of Democracy,** London, ; Tarzie vitachi ; **Emergency** 58 London, 1958.
12. Dept. of Government Printers, 1972, **The Constitution of Sri Lanka (Ceylon)**, Colombo,
13. Sathiaseelan,S; **Commnunalism and the Political Process in Sri Lanka 1956 - 1972, Ph. D** Dissertation, University of Jaffna, Jaffna.
14. Manoharan, C; 1982, **Ethnic Conflict and Reconciliation in Sri Lanka,** University of Hawai Press, Hawai, .
15. சத்தியசீலன், ச; 1994, இலங்கை அரசியலில் மொழியும் மதமும் யாழ்ப்பாணம்,
16. ஆசிரியரால் புலம் பெயர்ந்தவர்களுடனான நேர்முக விசாரணைகளின் போது அவதானிக்கப்பட்டது.
17. ஆசிரியரால் திரு. G. சுசீந்திரன் ஜேர்மனி, திரு. F. அரவிந்தன், ஸ்ரீ பிரான்ஸ், திருமதி ரட்ணஜீவன் நெதர்லாந்து, Dr. கதிர்காமநாதன் டென்மார்க் போன்றோருடனான நேர்முக விசாரணைகளின் போது அறியப்பட்டது.
18. புலம் பெயர்ந்த பலருடனான உரையாடல்கள் மூலம் அவதானிக்கப்பட்டது.
19. பிரித்தானிய அகதிகள் கவுன்சிலின் இலங்கைத் திட்டத்தின் இணைப்பாளராக விளங்கும் திரு. மயன்விஜி அவர்கள் மேற்குலகக் குடிபெயர்வு தொடர்பான பல ஆவணங்களைத் தந்தது மட்டுமல்லாது குடிபெயர்வு அகதிகள் தொடர்பாகப் பல ஐயங்களைத் தீர்க்க உதவிய அவருக்கு ஆசிரியரின் மனமார்ந்த நன்றிகள்.

20. இந்த எண்ணிக்கை பெருமளவிற்குச் சரியானதாகவே பலதரப்பட்ட ஆவணங்களைக் கொண்டு கணிப்பிட முடிகின்றது.
21. கட்டுரையாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்த போது 2002 மேயில் கனடா நாட்டின் கௌரவ தூதுவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் சங்கத்துடன் மேற்கொண்ட சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.
22. **High Level Working Group in Asylum and Migration Draft Action Plan on Sri Lanka,** 1999.
23. **Sri Lankan Tamil Migration.** http // **w.w.w. tamiltigers.net/** Features/ tamil migration. html.
24. **High Level Working Group in Asylum and Migration Draft Action Plan on Sri Lanka.** 1999.
25. **Ibid.**
26. யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அலுவலகத் தகவல். (2003 ஆண்டு)
27. **High Level Working Group in Asylum and Migration Draft Action Plan on Sri Lanka.** 1999.
28. European Parliament Resolution 14, March 2002 P.S TARROV - 0135 Sri Lanka.
29. Refugee Council Response to U.K. Home Secretary's proposals on Asylum: A Discussion paper, October 2000, P.2.
30. கனடாவில் இருந்து பிரசுரிக்கப்படும் "தமிழன் வழிகாட்டி" அங்குள்ள ஈழத்தமிழரின் பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளையும் சமூக, கலாசார வாழ்வின் பெரும்பாலான அம்சங்களையும். விளங்கிக் கொள்ள உதவுகின்றது. அவ்வாறே லண்டனில் இருந்து பிரசுரிக்கப்படும் "தமிழ் ஒலை" காணப்படுகின்றது.
31. Kedourie, Elie;1979, **Nationalism,** London , p.64
32. தமிழீழ சர்வதேச மாணவர் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு, அவற்றின் செயற்பாடுகள் அதன் தலைவர் திரு. கஜேந்திரன் அவர்களுடன் (முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சபைத் தலைவர், தற்போது யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர்) உரையாடியதன் மூலம் அறியப்பட்டது.
33. அண்மைய மேற்கு நாடுகளின் கல்விச் சுற்றுலாவின் போது இந்நாடுகளில் இயங்கி வரும் MOIT, TIC, Sustaine அமைப்பு போன்றவற்றின் அங்கத்தவர்களுடன் உரையாடிய போது அவர்களாலே தெரிவிக்கப்பட்ட கருத்து.
34. அண்மைய மேற்கு நாடுகளுக்கான பயணத்தின் போது அறியப்பட்டது.
35. மேற்படி
36. கனடாவிற்கான பயணத்தின் போது அங்கு வாழும் புலம் பெயர்ந்தவர்களுடனான நேர் முகத்தின் போது அறியப்பட்டது.
37. **Refugee Council Update on Human Rights Situation in Sri Lanka.** Sri Lanka Human Rights and Return of Refugees, The Refugee Council, Sri Lanka project, London, Dec. 2001.